**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.220/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.11 |
| Name : | திரு. செல்வதுரை, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்(விருப்ப ஓய்வு) |
| Father's/Husband Name: | திரு. சுப்ரமணியன் |
| Village : | செந்துறை |
| Taluk : | அரியலூர் |
| Age : | 61/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 05.08.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி சின்னதுரை ஆஜர்.)**

i) நான் தற்போது அரியலூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த25.03.2020ம் தேதி குன்னம் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்த போது சேகர் மனைவி செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் வாக்குமூலத்தைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப குன்னம் காவல் நிலைய குற்ற எண் 104/2020 சட்டப்பிரிவுகள் 294(b), 447, 323, 324, 506(2) of IPC & 4 of TNPHW Act ன்படி 25.03.2020ம் தேதி காலை 9.30 மணிக்கு எதிரிகள் இருவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் **பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 25.03.2020ம் தேதி பகல் 11 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் வேல்முருகன், ராஜேந்திரன் ஆகியோர்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ3 மற்றும் அ.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

சம்பவயிடம் சென்று சாட்சிகள் செல்வி, ராயப்பன், பழனிவேல், தனக்கொடி, துரைக்கண்ணு, ராமசாமி, வேலுசாமி, ராமலிங்கம் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னுடைய விசாரணையிலிருந்து சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்து எதிரி செல்வி என்பவர் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று தெரியவந்ததால் 25.03.2020ம் தேதி இந்த வழக்கிலிருந்து செல்வியை நீக்கி எதிரி நீக்கல் அறிக்கை தாக்கல் செய்தேன். மேற்படி **நீக்கல் அறிக்கை அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

விசாரணையின் அடிப்படையில் இந்த வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 447, 324, 506(2) of IPC & 4 of TNPHW Act ன் கீழ் மாறுதல் செய்து 25.03.2020ம் தேதி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரி சின்னதுரை என்பவர் முன்பிணை பெற்றுள்ளதால் அவரை கைது செய்யவில்லை. காயம்பட்ட செல்வி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரேவந்த் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றை பெற்றேன். **செல்வியின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ7 மற்றும் அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

இறுதியாக, இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்து எதிரி சின்னதுரையின் மீது 03.08.2020ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 புகார்தாரருக்கும் எதிரிக்கும் குன்னம் நீதிமன்றத்தில் பாதை சம்மந்தமாக சிவில் வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். இரு தரப்பினருக்கும் மேற்கண்ட பாதை சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். புகாரில் அ.சா.1 புகார்தாரர் பெரம்பலூர் அரசு மருத்துமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். ப.சா.11 மருத்துவர் ரேவந்த்தை நான் விசாரணை செய்த போது கு.வி.மு.ச.பிரிவு 161(3) வாக்குமூலத்தில் புகார்தாரர் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் சம்பவயிடத்திற்கு அருகில் உள்ள வீடுகளில் வசிக்கும் நபர்களை விசாரித்து பட்டியல் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றாலும் மற்ற சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் மீது முன் விரோதம் காரணமாக பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரில் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கெதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.